**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 88/2021**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயகுமார் | தொழில் | : காரை வேலை |
| தந்தை பெயர் | : மாயவன் | சமயம் | : |
| கிராமம் | : அத்திப்பட்டு | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 26 |

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 – 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1 முதல் 6, 8 முதல் 11, 14, 15 எதிரிகள் ஆஜர். 13ம் எதிரி இறந்துவிட்டார். 7, 12 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** பட்டியல் சாட்சி 2 விஜயலட்சுமி எனது அக்கா. பட்டியல் சாட்சி 3 உண்ணாமலை எனது அம்மா. பட்டியல் சாட்சி 4 மாயவன் எனது தந்தை. ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்கள்.

2. கடந்த 2015ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் காலை 07.00 மணியளவில் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது எங்கள் வீட்டு படியை உடைப்பது போன்று சத்தம் கேட்டது. அப்பொழுது வெளியே வந்து பார்த்தபோது மூர்த்தி, அண்ணாதுரை, தங்கம் மற்றும் சிலர் உடைத்துக்கொண்டிருந்தார்கள். ஆஜரானவர்களும் அங்கு இருந்தார்கள். அப்பொழுது ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் அனைவரும் அப்படித்தான் உடைப்பேன் என்றும் உன்னால் முடிந்தால் பார்த்துக்கொள் என்றும் சொன்னார்கள். அப்போது வீட்டில் இருந்து என் அக்கா வெளியே வந்து பார்த்து கேட்டபோது என் அக்காவை அடித்து என் அக்காவின் துணியை கிழித்து விட்டார்கள். எனக்கும் என் அக்காவுக்கும் மூச்சு பேச்சில்லாமல் செய்துவிட்டார்கள். நான் மயக்கமடைந்து கிடந்தேன். அப்பொழுது எனது தாயார் பஸ் ஸ்டாப்பில் இருந்த நிலையில் தகவல் சொல்லி வரவைத்தோம். என் தாயாரிடமும் அப்படிதான் செய்வோம் என்று திமிராக பேசினார்கள். காயம்பட்ட நானும், அக்காவும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்து நான் மட்டும் செஞ்சிஅரசு மருத்துவமணையில் இருந்தேன். எனது அக்கா

முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்றார். 1 வாரம் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை எடுத்தோம். போலிசார் எங்களை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1. 16.04.2015 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

3. எங்கள் வீட்டிற்கு முன்பாக பாதை வழியாகத்தான் சுடுகாட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். என் தந்தை சுடுகாட்டிற்கு செல்லும் பாதையில் 3 அடி எடுத்து வீடு கட்டிவிட்டார் என்றால் சரியல்ல. பட்டா இடத்தில் தான் வீடு உள்ளது. வீடு கட்டியபோது பாதையில் தள்ளி கட்டக்கூடாது என்று ஊரில் உள்ளவர்கள் சொல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை. சர்வேயர், தாசில்தார் ஆகியோர்கள் வந்து 2015 ல் சுடுகாட்டிற்கு செல்லும் பாதையையும் எங்கள் இடத்தையும் அளவீடு செய்து பார்த்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு அளந்து பார்த்ததில் 3 அடி தள்ளி கட்டியிருப்பதை பார்த்துவிட்டு கட்டிய வீட்டை இடிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு என் தந்தை மீண்டும் சுடுகாட்டிற்கு செல்லும் பாதையில் 3 அடி தள்ளி படி கட்டினார் என்றால் சரியல்ல. பட்டா இடத்தில் தான் படி உள்ளது. தற்போதும் எங்கள் வீட்டு படி பாதைக்கு இடையூறாக உள்ளது என்றால் வீட்டு படி முழுவதையும் அப்போதே இடித்துவிட்டார்கள். சம்பவம் நடந்தபோது நான் வீட்டினுள் இருந்தேன். சுமார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் 15 பேர் இருப்பார்கள். 15 நபருக்கும் மேல் வந்தார்கள். நான் வெளியே வந்து பார்த்தபோது படி இருந்ததா என்றால் இடித்துவிட்டார்கள். நான் பார்த்தபோது படி இல்லை என்றால் இல்லை. அது எப்படி இடிந்தது என்று எனக்கு தெரியாது என்றால் இடித்துவிட்டார்கள். நான் இடிக்கும்போது பார்த்தேனா என்றால் இல்லை. இப்போது படி கட்டி இருக்கோம் என்று எதிரிகள்கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் துணி கிழித்ததாகவோ, படி இடித்ததாகவோ எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. சுடுகாட்டு பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியதை ஊர்க்காரர்கள் தான் கேட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகள் யாரும் வரவில்லை என்றால் சரியல்ல. வந்தார்கள். நான் கூறிய அண்ணாதுரை, தங்கம், மூர்த்தி ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக புகார்

வாக்குமூலம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வீட்டையும், படியையும் காப்பாற்றுவதற்கு பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 88/2021**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயலட்சுமி | தொழில் | : இல்லத்தரசி |
| தந்தை பெயர் | : பிரபு | சமயம் | : |
| கிராமம் | : அத்திப்பட்டு | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 27 |

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 – 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1 முதல் 6, 8 முதல் 11, 14, 15 எதிரிகள் ஆஜர். 13ம் எதிரி இறந்துவிட்டார். 7,12 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** அ.சா.1 விஜயகுமார் எனக்கு தம்பி. பட்டியல் சாட்சி 3 உண்ணாமலை எனது அம்மா. பட்டியல் சாட்சி 4 மாயவன் எனது தந்தை. ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்கள்.

2. கடந்த 2015ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் காலை 07.30 மணியளவில் நானும், எனது தம்பி, தங்கை ஆகியோர்கள் வீட்டில் இருந்தோம். அப்போது வீட்டின் வெளியே படி இடிப்பது போல் சத்தம் கேட்டது. நாங்கள் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் தங்கம், கமல், அண்ணாதுரை, மூர்த்தி, வெங்கடேஷ் ஆகியோர்களுடன் சுமார் 15 நபர்கள் இடித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நானும், எனது தம்பியும் தடுக்கும்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் கும்பலாக வந்து என்னையும், எனது தம்பியையும் மண்வெட்டி, கொம்பு ஆகியவற்றால் அடித்தார்கள். அப்பொழுது தங்கம் என்பவர் எனது ஆடைகளை கிழித்தார். பின்னர் என்னை கீழே தள்ளி செருப்பு காலால் மிதித்தார். பின்னர், எதிரிகள் அனைவரும் சேர்ந்து எங்கள் வீட்டு படியை இடித்து படியை மட்டும் தரைமட்டமாக்கினார்கள். காயம்பட்ட நானும், என் தம்பியும் மருத்துவமனைக்கு சென்றோம். என் தம்பி திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றார். நான் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். 1 வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

3. திருவண்ணாமலை மருத்துவமனைக்கு என் தம்பி சிகிச்சை பெற்றதும், நான் பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றோம். நான் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். செஞ்சிஅரசு மருத்துவமனையில் மருத்துவர் வழங்கிய காயச்சான்று இருந்தால் அது தவறு என்றால் சரிதான். சண்டை நடந்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. வீடு இடிக்கும் சத்தம் கேட்டுதான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் வெளியே வந்து பார்க்கும்போது படி இல்லை என்றால் சரிதான். வீட்டின் படி எப்படி விழுந்தது என்றால் எதிரிகள் தான் இடித்து தள்ளினார்கள். இடித்தபோது நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சாட்சி கூறியபோதுபோல் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்கம் என் ஆடைகளை கிழித்ததாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். கிழிந்த துணியை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கீழே தள்ளி செருப்பு காலால் மிதித்ததாக போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சொன்னேன். போலிசாரிடம் ஒரு மாதிரி சொல்லிவிட்டு நீதிமன்றத்தில் வேறு மாதிரி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஜிப்மர் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வீட்டையும், படியையும் காப்பாற்றுவதற்கு பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.